# அத்தியாயம் 6


## இலங்கையின் குடியிருப்புக்கள்

சூழலின் நெருக்குதல்களிலிருந்து விடுபடுவதற்கும் வனவிலங்குகள் எதிரிகள் முதலியவற்றிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்குமாக உருவாக்கப்பட்ட ஒரு அலகே குடியிருப்பாகும் என்பதை ஏற்கனவே கற்றுள்ளோம்.

## 6.1 இலங்கையில் குடியிருப்புக்களின் வளர்ச்சி

இலங்கையின் குடியிருப்புக்களின் வளர்ச்சியும் அதிகரிப்பும் அதன் அதிகரித்துவரும் சனத்தொகையுடன் தொடர்புபட்டதாகவே அமைந்துள்ளன. இலங்கையில் ஆதிக் குடியிருப்புகள் தொடர்பான தகவல்கள் மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன. இலங்கையின் ஆதிக்குடிகளான இயக்கர், நாகர், வேட்டையாடுபவர்களாக இருந்தமையால் குகைகள், மரப்பொந்துகள் போன்ற இடங்களைத் தற்காலிக வதிவிடமாகக் கொண்டிருந்தார்கள்.

படம் 6.1 இலங்கையில் ஆரியக் குடியிருப்புக்கள்



இலங்கையின் வரலாற்றுக் காலகட்டம் விஜயனின் வருகையுடன் ஆரம்பிக்கிறது. வட இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வருகை தந்த ஆரியர்கள் தமது வாழ்வாதார நெற்செய்கையை மேற்கொள்வதற்காக ஆற்றங்கரைகளை அண்டிக் குடியேறினார்கள். இக் குடியிருப்புக்களே இலங்கையின் கிராமக் குடியிருப்புக்களின் ஆரம்பமாகும். நெற்செய்கைக்குச் சாதகமான நல்ல நீர்வளம், சிறந்த காலநிலை, வண்டல்மண் போன்றவை ஆற்றங்கரைகளை அண்டிக் காணப்பட்டதால் ஆரியர்கள் தமது குடியிருப்புக்களை ஆற்றங்கரைகளை அண்டி அமைத்துக்கொண்டார்கள். தற்காலிக வதிவிடங்களைக் கொண்டிருந்த மக்கள் நெற்செய்கையில் ஈடுபடத் தொடங்கியதும் நிரந்தர இருப்பிடங்களை அமைத்து வாழத் தொடங்கினார்கள். (படம் 6.1)

### ஆரியர் வருகையின் பின்னர் ஏற்பட்ட குடியிருப்புக்கள்

| ஆறுகள் | குடியேற்றங்கள் |
|---|---|
| மல்வத்து ஓயா | அநுராதகம, உபதிஸ்ஸகம |
| கலா ஓயா | உருவெலகம |
| களனி கங்கை | கல்யாணி |
| கிரிந்தி ஓயா | மகாகம |
| மாணிக்க கங்கை | காஜரகம |
| கல்லோயா | தீகவாபி |

இலங்கையின் ஆரம்ப நகராக்கம் அநுராதபுரத்திலிருந்து ஆரம்பிக்கிறது. அநுராதகமவை பண்டுகாபய மன்னன் அநுராதபுரம் என மாற்றி, திட்டமிடப்பட்ட நகரமாக்கினான் என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. வீடுகள், நீர் வழிந்தோடக்கூடிய கால்வாய்த் தொகுதிகள், கழிவறைகள், மயானம், பூங்காக்கள், தடாகங்கள், அரச மாளிகைகள் என்பன அவற்றில் முக்கியமானவையாகும்.

அநுராதபுர ஆட்சியாளனான தேவநம்பியதீசன் (கி.மு. - 250 - 210) மன்னன் காலத்தில் இந்தியாவிலிருந்து அசோகச் சக்கரவர்த்தியினால் பௌத்த மதம் பரப்பப்பட்டது. பௌத்த மதக் கருத்துக்களை ஏற்றுக்கொண்ட பௌத்த துறவிகள் ஆராமை எனப்படும் இடங்களில் வசிக்கத் தொடங்கினார்கள்.

ஆரியர் வருகையுடன் ஆரம்பித்த விவசாயக் குடியிருப்புகள் உலர்வலயத்திலேயே அதிகளவில் காணப்பட்டன. 300 மீற்றர் உயரத்துக்கு மேற்பட்ட தென்மேற்கு ஈரவலய, மத்திய மலைநாட்டுப் பகுதிகள் விவசாயத்திற்குச் சாதகமான இடங்களாக

இல்லாதபடியால் உலர்வலயப் பகுதிகளில் விவசாயக் குடியிருப்புக்கள் அதிகளவில் தோற்றம் பெற்றன.

உலர் வலயத்தில் வாழ்ந்த விவசாயிகள் விவசாயச் செய்கையின்போது நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்கியபடியால் குளங்கள், கால்வாய்கள் போன்றன அமைக்கப்பட்டன. கி.மு. 3ம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி. 13ம் நூற்றாண்டு வரை ஆசியாவிலேயே பிரசித்தி பெற்ற விவசாய நாகரீகம் வளர்ச்சியடைந்தது. நீர்ப்பாசனக் குளங்கள், கால்வாய்களை அண்டி அதிகளவில் மக்கள் வாழத் தொடங்கினார்கள்.

இக்குடியிருப்புக்கள் குளம், வயல், மேட்டு நிலம், புல் நிலம், காடு என்பனவற்றைக் கொண்டதாக விளங்கியது. இவை தன்னிறைவு பெற்ற கிராமங்களாகக் காணப்பட்டன. நெற்பயிர்ச்செய்கை பிரதான வாழ்வாதார நடவடிக்கையாகவும் அரிசி பிரதான உணவாகவும் காணப்பட்டது. மேட்டு நிலத்தில் வீட்டுத் தோட்டங்களும் சேனைப் பயிர்ச்செய்கையும் இடம்பெற்றன. அரிசிக்குப் பதிலாக குரக்கன், சாமை போன்ற தானியங்களும் வீட்டுத் தோட்டங்களில் மரக்கறி, பழவகை போன்றனவும் பயிரிடப்பட்டன. பசளை, பால் என்பவற்றைப் பெறுவதற்காக மாடுகள் வளர்க்கப்பட்டமை இக்கிராம குடியிருப்புக்களின் சிறப்பான பண்புகளாகும்.

அநுராதபுரக் காலத்தைத் தொடர்ந்து பொலன்னறுவைக் காலப்பகுதிகளிலும் குளங்கள், கால்வாய்களை அண்டி விவசாயம் சார்ந்த விவசாயக் குடியிருப்புக்கள் அதிகரித்தன. அநுராதபுரம், பொலன்னறுவைக் காலப்பகுதிகளில் விவசாய அபிவிருத்தி மட்டுமல்லாமல் சிற்பக்கலை, கட்டிடக்கலை, செதுக்கற்கலை போன்றனவும் வளர்ச்சியடைந்தன. அத்துடன் பௌத்த மதத்தைப் பரப்ப வந்த சங்கமித்தையுடன் வருகை தந்த பல்வேறுபட்ட கலைஞர்களால் கைவினை உற்பத்திகள் பெருக்க மடைந்தன. இக்காலப் பகுதிகளில் வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளும் காணப்பட்டமையால் ஓடத்துறைகளையடுத்தும் குடியிருப்புக்கள் அதிகரித்தன. கோகர்ணம், ஜம்புகோளப்பட்டினம், மாந்தை, தம்பபன்னி போன்றவை இவ்வாறான குடியிருப்புக்களாகும்.

நீர்ப்பாசனத்துக்கும் மக்கள் தொகைக்குமிடையேயான சரியான கணிப்பீடுகள் கிடைக்கப்பெறவில்லை. எனினும் பிரதான கிராமிய சனத்தொகை நீர்ப்பாசனக் குளங்களை அண்டிக் காணப்பட்டதாக வரலாற்றுத் தகவல்களிலிருந்து அறிய முடிகின்றது.

பிற நாட்டாரின் படையெடுப்பு, நீர்ப்பாசனங்கள் பராமரிக்கப்படாமை மலேரியா நோய் போன்ற காரணங்களால் மக்கள் பெருமளவில் உலர் வலயத்திலிருந்து ஈரவலயத்தை நோக்கி இடம்பெயர்ந்தார்கள். தம்பதெனியா, யாப்பகூவ, குருநாகல், கம்பளை, இறைகம, கோட்டை போன்ற இடங்களுக்கே தலைநகரங்கள் இடம் பெயர்ந்தன.

கி.பி. 13ம் நூற்றாண்டு தொடக்கம் 15ம் நூற்றாண்டு வரை தலைநகரங்கள் இடம்பெயர்ந்த காலப்பகுதியாக வரையறுக்கப்படுகின்றது. அடிக்கடி ஏற்பட்ட அந்நியப் படையெடுப்புக்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் நோக்குடன் மலையகத்தை நோக்கி இத்தலைநகரங்கள் இடம்பெயர்ந்து, இறுதியாக கோட்டை தலைநகரமாக்கப்பட்டது. ஈரவலயத்தில் குளத்தை மையமாகக் கொண்ட குடியிருப்புக்கள் காணப்படாமை முக்கிய அம்சமாகும்.

தலைநகரங்களின் இடப்பெயர்வுடன் மக்களும் தலைநகரங்களை அடுத்து தமது குடியிருப்புக்களை ஏற்படுத்திக்கொண்டமை புலனாகிறது. இக்காலப்பகுதி இரண்டாவது நகராக்கக் காலப்பகுதியாக வரையறுக்கப்படுகிறது. இக்காலப்பகுதிகளில் கறுவா, ஏலம் போன்ற வாசனைத் திரவியங்களின் வர்த்தக நடவடிக்கைகள் அதிகரித்தமையால் துறைமுகங்களின் வளர்ச்சியும் ஏற்பட்டது. கரையோரப் பகுதிகளில் அராபிய முஸ்லிம்களின் குடியேற்றங்கள் அதிகளவில் ஏற்பட்டன. இரண்டாவது நகராக்கம் பரவிய காலப்பகுதியில் குடியிருப்பு அமைப்பு தொடர்பாக குறைவான தகவல்களே உள்ளன.

கி.பி. 1500க்குப் பிறகு ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்து இலங்கையில் காலனித்துவ ஆட்சி ஏற்பட்டது. இக்காலத்தில் இலங்கையின் சமூக, பொருளாதார, அரசியல்துறைகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்பட்டன. அக்காலப்பகுதியில் கரையோரத்தில் அந்நியர் ஆட்சியும் கண்டியைத் தலைநகரமாகக் கொண்ட மலையகத்தில் சுதந்திர இராச்சிய அமைப்பும் காணப்பட்டது. கண்டிய காலப்பகுதி மூன்றாவது நகராக்க காலப்பகுதியாக வரையறுக்கப்படுகிறது. மலையகத்தில் அதிகளவு மக்கள் குடியிருப்புக்கள் ஏற்பட்டன.

பிரித்தானியர் கி.பி. 1815இல் மலையகத்தைக் கைப்பற்றி இலங்கை முழுவதையும் தமது ஆட்சியின் கீழ் கொண்டுவந்தார்கள். நவீன காலனித்துவ ஆட்சியின் கீழ் அரசியல், பொருளாதார, சமூக செயற்பாடுகளில் பல்வேறு மாற்றங்கள் கொண்டுவரப்பட்டன.

மலையகத்தில் பெருந்தோட்டப் பயிர்களை அறிமுகப்படுத்தியமையால் அதில் வேலை செய்வதற்கென இந்தியாவிலிருந்து தோட்டத் தொழிலாளர்கள் வரவழைக்கப்பட்டு குடியேற்றப்பட்டார்கள். மலையகத்தில் தோட்டக் குடியிருப்புக்கள் அதிகளவில் உருவாகின. பிரித்தானியரின் தரிசு நிலச் சட்டத்தின் கீழ் மலையக மக்கள் காணிகளை இழக்கவேண்டி ஏற்பட்டது. அவ்வாறாகப்

பெறப்பட்ட காணிகளில் பெருந்தோட்டப் பயிர்கள் விளைவிக்கப்பட்டதோடு, பெருந்தோட்டத் தொழிலாளர்களும் குடியமர்த்தப்பட்டனர்.


ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரத்தைத் தொடர்ந்து போக்குவரத்துத் துறையில் பாரிய அபிவிருத்தி ஏற்பட்டது. பெருந்தெருக்கள் மூலம் மலையகமும் நாட்டின் ஏனைய பகுதிகளும் கொழும்பு நகரத்துடன் இணைக்கப்பட்டன. புகையிரத சேவையும் ஆரம்பிக்கப்பட்டது. பெருந்தோட்ட உற்பத்திகளை ஏற்றுமதி செய்வதற்காக கொழும்புத் துறைமுகம் விருத்தி செய்யப்பட்டது. இதனால் குடியிருப்புக் கோலங்களிலும் மாற்றங்கள் ஏற்பட்டன. நகரக் குடியிருப்புக்கள் இதனால் விருத்தியடையத் தொடங்கின.
உதாரணம் கொழும்பு, காலி, கண்டி.

பிரித்தானியராட்சியில் கோல்புறூக் சீர்திருத்தத்தைத் தொடர்ந்து இராசகாரிய முறை நீக்கப்பட்டதால் அதன் மூலமாக பராமரிக்கப்பட்ட தெருக்களும் குளங்களும் சீரழியும் நிலை ஏற்பட்டது. அத்துடன் தன்னிறைவுப் பொருளாதாரம் மாற்றமடைந்து, ஏற்றுமதி இறக்குமதிப் பொருளாதாரக் கோலம் ஏற்பட்டது.

பிரித்தானியராட்சியின் இறுதிக் காலகட்டத்தில், அதாவது டொனமூர் யாப்பைத் தொடர்ந்து, இலங்கையில் பல விவசாயக் குடியேற்றங்கள் உருவாக்கப்பட்டன. அநுராதபுரம், பொலன்னறுவைக் காலப்பகுதியில் காணப்பட்ட பாழடைந்த குளங்கள் புனரமைப்புச் செய்யப்பட்டு, மக்கள் ஈரவலயத்திலிருந்து இப்பகுதிகளில் குடியமர்த்தப்பட்டார்கள். பாவற்குளம், இரணைமடு, கந்தளாய், மின்னேரியா, மினிப்பே போன்றன இவ்வாறாக அமைக்கப்பட்ட விவசாயக் குடியிருப்புக்களாகும். (படம் 6.2)

இலங்கை சுதந்திரமடைந்த பின் பலநோக்கு ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன. இவற்றில் கல்லோயா, உடவளவை, மகாவலி போன்றன முக்கியமான அபிவிருத்தித் திட்டங்களாகும்.

படம் 6.2 இலங்கையின் விவசாயக் குடியிருப்புக்கள்



இலங்கையில் விவசாயக் குடியேற்றத் திட்டங்களில் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்ய பாரிய நீர்ப்பாசனத் திட்டமான மகாவலி அபிவிருத்தித் திட்டம் மேற்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் கீழ் பல்வேறு பிரதேசங்களில் கொத்தணி ரீதியாக மக்கள் குடியமர்த்தப்பட்டனர். இலங்கையின் 16% நிலப்பரப்பில் மகாவலித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. உலர் வலயத்தில் மீண்டும் குடியிருப்புக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்களை இத்திட்டம் உருவாக்கியுள்ளது.

சுதந்திரத்தின் பின்னர் இலங்கையை அபிவிருத்தி செய்யும் பொருட்டு கைத்தொழில் துறை விருத்தி எதிர்ப்பார்க்கப்பட்டது. முதற் கட்டமாக பேரளவுக் கைத்தொழில்கள் பற்றி சிறப்பாகக் கவனம் செலுத்தப்பட்டது. அரச அனுசரணையின் கீழ் ஆரம்பிக்கப்பட்ட சீமெந்து, சீனி, இரசாயனம், ஒட்டுப்பலகை போன்ற கைத்தொழில்கள் நாடு முழுவதும் கிராமங்களில் அமைக்கப்பட்டன. இப்பகுதிகளுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தியதன் மூலம் மக்கள் அவ்விடங்களை நோக்கி ஈர்க்கப்பட்டார்கள். பின்னர் அரசின் கைத்தொழில் கொள்கையில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு ஏற்ப சிற்றளவு, நடுத்தர அளவுக் கைத்தொழில்களின் விருத்திக்காக தனியார்துறையும் பெருமளவு பங்களிப்புச் செய்தது. இதன் விளைவாக உட்கட்டமைப்பு வசதிகளும் உழைப்பும் உள்ள பிரதேசங்களுக்கு மக்கள் ஈர்க்கப்பட்டனர். இதற்கேற்ப இலங்கையின் கைத்தொழில்களில் 80 வீதத்துக்கும் அதிகமானவை கொழும்பு கம்பஹா மாவட்டங்களில் பரவிக் காணப்படுகின்றன. தொழிலுக்காக நகரத்துக்காக வரும் மக்கள் பெருமளவில் கொழும்பு நகரை அடுத்த உப நகரங்களில் வசித்தனர். இதனால் உப நகரங்களின் வளர்ச்சியும் துரிதமடைந்தது. கொழும்பு நகரை சுற்றியுள்ள வத்தளை, பேலியகொடை, ராகம, மொரட்டுவ, மஹரகம போன்ற நகரங்களை உதாரணங்களாகக் காட்டலாம்.

இலங்கை அதிகசனத்தொகை உள்ள நாடாகும், கொழும்பு, கம்பஹா, களுத்துறை, காலி, மாத்தறை மாவட்டங்கள் அடங்கிய வலயத்தினுள்ளேயே அதிகளவிலான சனத்தொகையினர் காணப்படுகின்றனர். மாவட்டங்களின் அடிப்படையில் அதிக சனத்தொகை கொழும்பு மாவட்டத்திலேயே காணப்படுகிறது. கொழும்புக்கு இடம்பெயர்ந்து வரும் கிராம மக்களில் பெருமளவானோர் பெருஞ் செலவு செய்து தங்குமிட வசதிகளைப் பெற முடியாத காரணத்தினால் குடிசை வீடுகளில் அல்லது சேரிப்புறங்களில் வாழ்கின்றனர். மருதானை, மாளிகாவத்தை, வாழைத்தோட்டம், புதுக்கடை (அளுத்கடை), பஞ்சிகாவத்தை என்பவற்றை உதாரணங்களாகக் கூறலாம். சேரிப்புறக் குடிசை வாசிகளுக்கான வீடுகளை அமைப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தி நிதி நிறுவனமும், வீடமைப்பு அதிகார சபையும் திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றன. பத்து லட்சம் வீடுகளை அமைக்கும் திட்டமும், “சுத்தமான குடியிருப்பு” செயற்றிட்டமும் இத்தகைய திட்டங்களில் சிலவாகும்.

சுதந்திரத்தின் பின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக கைத்தொழில்கள் விருத்தியடையத் தொடங்கியதனால் கைத்தொழில்களில் தொழில் வாய்ப்பைப் பெறுவதற்காக மக்கள் நகர்ப்புறங்களை நோக்கி இடம்பெயர்ந்தார்கள். அத்துடன் இலங்கையில் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தல் திட்டத்தின் கீழ் கைத்தொழில் உற்பத்திகள் அதிகரிக்கப்பட்டன. கைத்தொழில் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக சுதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டன. எனவே கைத்தொழில் நடவடிக்கை தொடர்பான குடியிருப்புக்கள் அதிகளவில் ஏற்படுத்தப்பட்டன. விமான நிலையம், துறைமுகம் சார்ந்த இடங்களில் இவ்வாறான குடியிருப்புக்கள் ஏற்பட்டன. இதனால் நகர்ப்புறங்களில் சனத்தொகை அதிகரிக்கத் தொடங்கியது.

அதிக சனத் தொகையினர் வாழும் நகரங்களில் சனச் செறிவைக் குறைக்கும் நோக்கில் இன்னொரு திட்டமிட்ட நகரில் நடவடிக்கைகளை முன்னெடுப்பதன் ஊடாக புதிய நகர்களை ஏற்படுத்தல் இலங்கையின் குடியிருப்பு வளர்ச்சியில் ஒரு புதிய போக்காகும். சனத்தொகை 8 லட்சத்திற்கு அதிகமாக மக்கள் வாழ்கின்ற கொழும்பு நகரத்தில் வர்த்தகம், நிதி, கல்வி, சுகாதாரம் சார்ந்த விடயங்கள் பலவும் மையப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றன. நாள் தோறும் பல்வேறு தேவைகளுக்காக ஒரு மில்லியனுக்கும் அதிகமான மக்கள் கொழும்பு நகருக்கு வருகின்றனர். கொழும்பு நகரில் நிலவும் சனநெருக்கடியையும் கருமங்களையும் குறைப்பதற்காக ஸ்ரீஜயவர்தனபுர கோட்டை புதிய நிர்வாக நகரமாகவும் கொழும்பு வர்த்தக மையமாகவும் மாற்றப்பட்டுள்ளது. இதற்கேற்ப பாராளுமன்றம், செத்சிறிபாய, இசுறுபாய போன்ற அரசாங்க அலுவலகங்கள் அமைந்துள்ள கட்டிடத் தொகுதிகள் புதிய நிர்வாக நகரமான கோட்டைக்கு அண்மையாக அமைந்துள்ளன. மேலும், 80 திணைக்களங்கள் புதிய நிர்வாக நகரமான ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டையில் அமைப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அநுராதபுர புதிய நகரமும் உடவளவையின் அண்மையிலுள்ள எம்பிலிபிட்டிய புதிய நகரமும் இவ்வாறு அமைக்கப்பட்ட நகரங்களுக்கு உதாரணங்களாகும்.

இலங்கையின் குடியிருப்புக்களின் வரலாற்று வளர்ச்சிக் காலகட்டம்

| ஆண்டு | யுகம் | | நிகழ்வு |
|---|---|---|---|
| **கி.மு. -75000<br>கி.மு. -20000<br>கி.மு. -10000** | **வரலாற்றுக்கு முற்பட்ட காலம்** | | **மெசோதிலிக் உணவு சேகரிப்பு** |
| **கி.மு. -1000<br>கி.மு. -300** | **வரலாற்றுக்கு முற்பட்ட காலம்** | | **உணவு உற்பத்தி<br>இரும்பு யுகம்<br>விவசாய நீர்ப்பாசனம்** |
| **கி.மு. 0** | ஆரம்ப அநுராதபுரக் காலம் | ஆரம்ப வரலாற்றுக் காலகட்டம் 1 | ஆரம்ப நகராக்கம் |
| **கி.பி. 300** | ஆரம்ப அநுராதபுரக் காலம் | ஆரம்ப வரலாற்றுக் காலகட்டம் 2 | பாரிய நீர்ப்பாசனமும் விவசாயக் குடியிருப்புக்களும் |
| **கி.பி. 650** | பிந்திய அநுராதபுரக் காலம் | மத்திய வரலாற்றுக் காலகட்டம் 1 | பாரிய நீர்ப்பாசனமும் கட்டிடக்கலைகளினதும் வளர்ச்சி |
| **கி.பி. 1250** | பொலநறுவை காலம் | மத்திய வரலாற்றுக் காலகட்டம் 2 | |
| **கி.பி. 1800** | தலைநகரங்கள் தென்மேற்கு நோக்கி இடம்பெயர்தல் | பிந்திய வரலாற்றுக் காலகட்டம் 1 | இரண்டாவது நகராக்கம் |
| | கோட்டைக் காலம்<br>கண்டிக் காலம் | பிந்திய வரலாற்றுக் காலகட்டம் 1 | காலனித்துவ ஆட்சி<br>மூன்றாவது நகராக்கம் |
| **கி.பி. 1900** | நவீன மாற்றமடையும் காலம் | | நவீன மாற்றங்கள் ஏற்படுதல் |

மூலம்: இலங்கைத் தேசப்படப்புத்தகம், நில அளவைத் திணைக்களம்.

## செயற்பாடு:

1. பண்டைய காலத்தில் குடியிருப்புக்கள் தோன்றுவதற்குக் காரணமாக இருந்த பௌதிகக் காரணிகள் இரண்டினை எழுதுக.
2. உலர் வலயத்திலிருந்து ஈர வலயத்துக்கு குடியிருப்புக்கள் இடம்பெயர்ந்தமைக்கான காரணிகள் இரண்டைக் குறிப்பிடுக.
3. இலங்கைப் புறவுருவப்படத்தில் பின்வருவனவற்றைக் குறித்துக் காட்டுக. ஈரவலயம், உலர் வலயம், கல்லோயா நீர்த்தேக்கம், மகாவலி கங்கை, அநுராதபுரம், பொலன்னறுவை, தம்பதெனிய, குருணாகல், யாப்பகூவ, கண்டி, கொழும்பு, காலி, மாத்தறை, களுத்துறை, மொரட்டுவ
4. உமது குடியிருப்பு அமைந்துள்ள நகரம் அல்லது கிராமத்தில் வாழும் முதியவர் ஒருவரிடமிருந்து பெற்றுக்கொண்ட தகவல்களைக் கொண்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| குடியிருந்த காலப்பகுதி | அக்காலப்பகுதியில் காணப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | அக்காலத்தில் இருந்த கட்டிடங்களின் எண்ணிக்கை | தற்போதைய நிலை பற்றிய அவரது அபிப்பிராயம் |
|---|---|---|---|
| | | | |

5. நீங்கள் வாழும் பிரதேசத்திலுள்ள ஒரு கிராமத்தை அடிப்படையாகக் கொண்டு நீங்கள் கற்ற ஒரு புராதன கிராமத்தின் பண்புகளுடன் ஒப்பிட்டு பின்வரும் அட்டவணையைப் பூர்த்திசெய்க.

| | பழைய கிராமம் உண்டு/இல்லை | புதிய கிராமம் உண்டு/இல்லை |
|---|---|---|
| - குளம்<br>- வணக்கஸ்தலம்<br>- வயல்<br>- பாடசாலை<br>- பண்டமாற்று முறை<br>- வர்த்தக நிலையங்கள்<br>- நகரத்துடன் தொடர்புபட்ட போக்குவரத்து முறை<br>- சேனைத் தோட்டம்<br>- மரக்கறி, பழவகை பயிர்ச்செய்கை | | |

6. I. நீங்கள் வாழ்வதற்கு மிகவும் விரும்பும் குடியிருப்பு வகை பின்வருவனவற்றுள் எது? கிராமம், நகரம், கிராமநகரம், (கிராம, நகர கலப்பு நகரம்)

II. அதற்கான காரணங்களைக் குறிப்பிடுக.

## 6.2 இலங்கையின் குடியிருப்புக் கோலங்கள்


இலங்கையின் குடியிருப்புக் கோலங்களை அவற்றின் அமைவிடத்தின் அடிப்படையிலும், அவற்றின் தொழிற்பாட்டின் அடிப்படையிலும் பாகுபாடு செய்ய முடியும். அமைவிடம் என்பது அவை கொண்டுள்ள வதிவிடங்கள், கட்டிடங்கள், பாதைகள் என்பவற்றைக் குறிக்கும். தொழிற்பாடு என்பது ஒவ்வொரு குடியிருப்பும் எத்தகைய செயற்பாடுகளை ஆற்றுகின்றன என்பதைக் குறிக்கும்.

இலங்கையில் குடியிருப்புகள் அமைவிடத்தின் அடிப்படையில் கிராமம், நகரம், கிராமநகரம் என வகைப்படுத்தப்படுகிறது. இலங்கையில் 10 இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற மாநகரமாக கொழும்பு விளங்குகின்றது. 14 மாநகரங்கள் இலங்கையில் காணப்படுகின்றன.

இலங்கையிலுள்ள நகரங்கள் சனத்தொகையின் அடிப்படையில் பெரிய நகரங்கள், நடுத்தர நகரங்கள், சிறிய நகரங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன.

| | |
|---|---|
| பெரிய நகரங்கள் - | 500,000க்கு மேற்பட்ட சனத்தொகை |
| நடுத்தர நகரங்கள் | 100,000 - 500,000 உட்பட்ட சனத்தொகை |
| சிறிய நகரங்கள் | 100,000 பேருக்குக் குறைவு |

இலங்கையின் குடியிருப்புக்களில் பெரும்பாலானவை கிராமக் குடியிருப்புக்களாகும். பயிர்ச்செய்கையில் தங்கி வாழ்கின்ற மக்கள் கிராம மக்களாக விளங்குகின்றார்கள். குடியிருப்புக்கள் தொழிற்பாட்டின் அடிப்படையில் பல வகைகளாக வகுக்கப்படுகின்றன.





**குக்கிராமம்:-** இலங்கையின் குடியிருப்புக் கோலங்களில் மிகக் குறைந்தளவு சனத்தொகை பரவிக் காணப்படும் குடியிருப்பு இதுவாகும். விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடும் மக்கள் குக்கிராமங்களில் வசிக்கின்றனர். விவசாய நடவடிக்கைகளில் நெற்பயிர்ச் செய்கையும், குரக்கன், சாமை போன்ற தானியங்களும் முக்கியம் பெறுகின்றன. கொத்மலை நீர்த்தேக்கத்தை அமைத்த போது மண் சரிவுகள்

ஏற்பட்டதால் வதிவிடங்களை இழந்த மக்களுக்காக கொத்மலை மலைச்சரிவுகளில் கட்டப்பட்ட றிவர்சைட், மொறகொல்ல போன்ற கிராமங்களை குக்கிராமங்களாக இனங்காணலாம்.

## குளக் குடியிருப்பு


ஆரம்ப காலகட்டங்களில் ஆரியரின் வருகையைத் தொடர்ந்து மிகக் குறைவான சனத்தொகையைக் கொண்ட விவசாயக் குடியிருப்புக்கள் ஆற்றங்கரைகளை அடுத்து உருவாகின. பயிர்ச்செய்கைக்கு நீர்ப்பற்றாக்குறையும் வெள்ளப் பெருக்கும் தடைகளாக அமைந்தமையால், குளங்களைக் கட்டி நீரைத் தேக்கி ஆண்டு முழுவதும் பயிர்ச் செய்கையில் ஈடுபட்டனர். எனவே உலர்வலயத்தில் அமைக்கப்பட்ட குளங்களையும் கால்வாய்களையும் சூழ்ந்து குடியிருப்புக்கள் அமைந்தன. இக்குடியிருப்புக்களில் நெற்பயிர்ச் செய்கை அடிப்படைப் பொருளாதார நடவடிக்கையாக அமைவதுடன் பயறு, குரக்கன் போன்ற சேனைப் பயிர்ச் செய்கையும், வீட்டுத் தோட்டத்தில் மரக்கறிப் பயிர்ச்செய்கையும், பழச் செய்கையும் காணப்பட்டன. குளங்களில் மீன்பிடித்தலும், காடுகளில் வேட்டையாடுதலும் இடம்பெற்றன. வேட்டையாடிய இறைச்சியை குடும்பங்களுடன் பகிர்ந்து ஒற்றுமையாக வாழ்ந்தனர்.

உரு: 6.1 குளக் குடியிருப்பு



## நேர்கோட்டுக் குடியிருப்பு

உரு: 6.2 நேர்கோட்டுக் குடியிருப்பு




இலங்கையின் குடியிருப்புக் கோலங்களில் நேர்கோட்டுக் குடியிருப்பும் ஒன்றாகும். கால்வாய்களின் இருபுறங்களிலும் பெருந்தெருக்களின் இருபுறங்களிலும் நேர்கோட்டுக் குடியிருப்புக்கள் உருவாக்கப்பட்டன. தன்னிறைவுக் கிராமங்களில் உற்பத்தி அதிகரிப்பு ஏற்பட்டு அவற்றை ஏனைய பகுதிகளுக்குக் கொண்டுசெல்லவேண்டிய

தேவை உருவாகியதால் போக்குவரத்துப் பாதைகளின் இரு மருங்குகளிலும் நேர்கோட்டுக் குடியிருப்புக்கள் ஏற்பட்டன. புராதன காலத்தில் குளங்களை அண்மித்து கட்டம் கட்டமாக இருந்த குடியிருப்புக்கள் காலப் போக்கில் ஏனைய கிராமங்களுடனும் நகரங்களுடனும் தொடர்புகளை மேற்கொள்ள வேண்டி ஏற்பட்டது. இதனால், பெருந்தெருக்கள் விருத்தியடைந்து பிற்காலத்தில் கட்டம் கட்டமாக இருந்த குடியிருப்புக்கள் வீதியின் இரு மருங்குகளிலும் அமைக்கப்பட்டு நேர்கோட்டுக் குடியிருப்புக்கள் உருவாகின. கடற்கரையோரங்களில் பொருளாதார நடவடிக்கைகளின் பொருட்டும், இத்தகைய நேர்கோட்டுக் குடியிருப்புக்கள் காணப்படுகின்றன. ஆரம்பத்தில் உலர் வலயத்தில் விவசாயக் குடியேற்றங்களை ஏற்படுத்தும்போது நேர்கோட்டு முறையே பின்பற்றப்பட்டது. உதாரணமாக காகம, கட்டியாவ, விவசாயக் குடியேற்றத் திட்டங்களைக் குறிப்பிடலாம்.

## மீனவக் குடியிருப்பு

உரு: 6.3 மீனவக் குடியிருப்பு



இலங்கை தீவாகையால் இலங்கையைச் சூழவுள்ள கடற்கரைப் பிரதேசங்களை அடுத்துள்ள மக்கள் மீன்பிடியை வாழ்வாதாரமாகக் கொண்டதால் மீனவக் கிராமங்கள் தோற்றம் பெற்றன. மயிலிட்டி, கற்பிட்டி, மிரிஸ்ஸ, பேருவளை, தங்காலை, நீர்கொழும்பு, பேசாலை, கல்முனை, மன்னார், திருகோணமலை, சிலாபம், காலி போன்றன மீனவர்கள் அதிகளவில் வாழும் பிரதேசங்களாக இருப்பதோடு, மீன்பிடித் துறைமுகங்களாகவும் விளங்குகின்றன. பருவ காலங்களுக்கு ஏற்ப மீனவர்கள் இடம்பெயர்வதால் அவர்களது வீடுகள் பெருமளவில் குடிசைகளாகவே காணப்படுகின்றன. 2004ல் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தால் மீனவக் குடியிருப்புக்களுக்கு பெருமளவு சேதம் ஏற்பட்டது.

## தோட்டக் குடியிருப்பு

உரு: 6.4 தோட்டக் குடியிருப்பு



பிரித்தானியரால் அறிமுகப் படுத்தப்பட்ட பெருந்தோட்டப் பயிர்ச்செய்கையில் தொழில் புரிவதற்கு தென்இந்தியாவிலிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப் பட்டனர். இத்தோட்டத்தொழிலாளர்கள் வாழ்வதற்கான குடியிருப்புக்கள் மலையகப் பகுதிகளில் அமைக்கப்பட்டன. இவை நிரற்படுத்தப்பட்ட சிறிய அறைகள் கொண்ட லயன் குடியிருப்புக்களாகக் காணப்பட்டன. இவை மிகவும் வசதி

குறைந்தவை. இதற்கு அண்மையில் பாடசாலை, இந்துக் கோவில் என்பவற்றைக் காணலாம். தரிசு நிலச் சட்டத்தின் கீழ் மலையக மக்களிடமிருந்து பெறப் பட்ட காணிகளிலேயே இவ்வாறான லயன் குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன.

## ஓடத் துறைக் குடியிருப்பு

ஐரோப்பியர் வருகையுடன் இலங்கையில் வர்த்தகம் விருத்தியடையத் தொடங்கியமையால் ஓடத்துறைகளை அண்டி மக்கள் அதிகளவில் குடியேறினர். இவை ஓடத்துறைக் குடியிருப்புக்கள் எனப்படுகின்றன. உதாரணம்: மன்னார், திருகோணமலை, கற்பிட்டி.

## மகாவலிக் குடியிருப்பு

உரு: 6.5 கொத்தணிக் குடியிருப்பு



சுதந்திரத்தின் பின் இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட பல்நோக்கு ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தித் திட்டங்களைத் தொடர்ந்து குறிப்பிட்ட ஆறுகளை அடுத்து குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டன. கல்லோயாவிலும் அதனையடுத்து வளவகங்கையைச் சூழவும்குடியிருப்புக்கள் அதிகரித்தன. எனினும் இவற்றுள் மகாவலி கங்கையுடன் தொடர்புபட்ட குடியிருப்புக்கள் விசேடமானவை. ஆரம்ப குடியிருப்புக்கள் நேர்கோட்டு முறையில் அமைந்துகாணப்பட்டதால் வளங்களைப் பங்கிடுவதில் பிரச்சினைகள் எற்பட்டன. ஆரம்ப காலத்தில் திட்டமிடப்படாத குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டதால் குடியிருப்புக்களுக்கும் விவசாய நிலங்களுக்கும் இடையேயுள்ள தூரம் அதிகரித்து இருந்தது.

ஆனால் மகாவலித் திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்ட முறையில் கொத்தணிக் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமையினால் விவசாய நிலங்கள் குடியிருப்புக்களுக்கு அண்மையில் காணப்பட்டதோடு, பல்வேறு சேவைகளையும் இலகுவாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாய் இருக்கிறது.

## கைத்தொழிற் குடியிருப்புக்கள்

1960களின் பின் இலங்கையில் ஏற்றுமதியைப் பன்முகப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் பல்வேறுபட்ட உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்தது. அரசாங்கம் கைத்தொழில் நடவடிக்கைகளை ஊக்குவிப்பதற்காக சுதந்திர வர்த்தக

வலயம், கைத்தொழிற் பேட்டைகள், கைத்தொழிற் கிராமங்கள் போன்றவற்றை உருவாக்கியதால் அப்பகுதிகளை அண்மித்து பாரிய அளவில் குடியிருப்புக்கள் ஏற்படுத்தப்பட்டன.

மேல் மாகாணப் பகுதியிலேயே அதாவது தலைநகரை அடுத்துள்ள பகுதிகளிலேயே 80%மான கைத்தொழில் நடவடிக்கைகள் காணப்பட்டதால் தலைநகரைச் சூழ்ந்து பாரிய அளவில் குடியிருப்புக்கள் ஏற்பட்டன. சனத்தொகையின் அளவுக்கு நிலத்தின் அளவு போதாமையால் தொடர் குடியிருப்புக்களும் அடுக்கு மாடிக் கட்டிடங்களும் அமைக்கப்பட்டன. கைத்தொழில் உற்பத்திகளை விரைவாக ஏற்றுமதி செய்யும் நோக்குடன் கட்டுநாயக்கா விமான நிலையத்தையடுத்து சுதந்திர வர்த்தக வலயங்கள் உருவாக்கப்பட்டன. அத்துடன் அச்சுவேலி, பள்ளேகல, ஏக்கல போன்ற இடங்களில் கைத்தொழிற் பேட்டைகள் உருவாக்கப்பட்டன.

அத்துடன் சீதாவாக்கை போன்ற இடங்களில் கைத்தொழில் நகரங்களும் உருவாக்கப்பட்டன. கைத்தொழில் நகரமான சீதாவாக்கையில் சிற்றளவான கைத்தொழில்களும், நடுத்தரமான கைத்தொழில்களும் ஓரிடத்திலேயே நிறுவப்பட்டுள்ளன. அலங்கார வேலைப்பாடுகள், அலங்கார மட்பாண்டம் செய்தல், பாய் இழைத்தல், கலை வேலைப்பாடுகள், தும்பு உற்பத்திகள், பித்தளைப் பண்டங்கள், ஆபரணங்கள், இரத்தினக்கல் வெட்டுதல், நெசவு, அலுமினியம், பிளாஸ்டிக்பொருள் உற்பத்தி, ஆடைக் கைத்தொழில் போன்ற பல்வேறு கைத்தொழில்கள் ஓரிடத்திலேயே அமைக்கப்பட்டுள்ளமை சிறப்பம்சமாகும். மகும்புற, குருவிட்ட, தங்கொட்டுவ, பெலவத்த போன்ற இடங்களில் கைத்தொழில் கிராமங்கள் அமைக்கப்பட்டன. இதனால் இக்கைத்தொழில் கிராமங்களில் குடியிருப்புக்கள் அதிகரிக்கத் தொடங்கின. அத்துடன் கைத்தொழில் பயிற்சிகளை வழங்கும் வேலைத்திட்டங்களும் கைத்தொழில் குடியிருப்புகளுக்கு அண்மையில் இடம்பெறுகின்றன.

**கைத்தொழில் நகரங்கள்:** சுதேச கைத்தொழில் பிரிவை விரிவாக்கவும், தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்கவும் நோக்கமாகக் கொண்டு கைத்தொழில் நகரங்கள் உருவாக்கப்பட்டுள்ளன. இக்கைத்தொழிலுக்கான உட்கட்டமைப்பு வசதிகள், கடன்வசதிகள், மூலப் பொருட்களைப் பெறுதல், ஏற்றுமதி வசதிகள் போன்ற நடவடிக்கைகள் மூலம் கைத்தொழில் உரிமையாளர்களுக்கு தேவையான நன்மைகள் வழங்கப்படுகின்றன. ஆடைக் கைத்தொழில், பிளாஸ்ரிக்குப் பொருள் உற்பத்தி, அச்சிட்ட துணி உற்பத்தி என்பனவும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. கைத்தொழில் நகரங்களில் பணிபுரிவோர் அப்பிரதேச வாசிகளாக இருப்பதால் நகரத்தை நோக்கி மக்கள் இடம் பெயர்வது தவிர்க்கப்படுகிறது. அத்துடன் நகருக்கு வெளியிலுள்ள பிரதேசங்களில் கைத்தொழில்கள் விருத்தியடைதல் இதன்மூலம் சாத்தியமாகிறது. தங்க ஆபரண உற்பத்தியாளர்கள் நத்தரம்பொத்த கைத்தொழில் நகரத்தில் ஒன்று சேர்ந்து உற்பத்தியை மேற்கொள்வதால் ஏற்றுமதி

வசதிகளும் கடன்வசதிகளும் அரசின் அனுசரணைகளையும் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருப்பதை உதாரணமாகக் கூறலாம்.

**செயற்பாடு:**

1. புராதன குளக் குடியிருப்பு ஒன்றின் முக்கியமான பண்புகள் ஐந்தினைக் குறிப்பிடுக

2. 1) இலங்கையின் குடியிருப்புக்களில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள் ஐந்தினை தருக.
   2) அவற்றுக்கு ஒவ்வொரு உதாரணம் தருக.

3. மகாவலிக் குடியிருப்புக்களின் விசேட பண்புகள் இரண்டினைக் குறிப்பிடுக.

4. மகாவலிக் குடியிருப்பு கொத்தணி முறையில் அமைந்தமையால் ஏற்பட்டுள்ள நன்மைகள் இரண்டினைக் குறிப்பிடுக.

5. பின்வரும் குடியிருப்புக்கள் ஒவ்வொன்றினதும் பண்புகள் மூன்றினைக் குறிப்பிடுக.
   1) தோட்டக் குடியிருப்பு
   2) மீனவக் குடியிருப்பு
   3) கைத்தொழில் பேட்டை
   4) கைத்தொழில் கிராமம்

6. கொழும்பு, கம்பஹா மாவட்டங்களில் குடியிருப்புக்கள் அதிகளவில் ஏற்பட்டமைக்கான காரணங்கள் ஐந்தினைக் குறிப்பிடுக.

## 6.3 இலங்கையில் குடியிருப்பு முறையில் ஏற்பட்டுள்ள மாற்றங்கள்

இலங்கையின் குடித்தொகையில் 78.5%மானோர் கிராமிய மக்களாகவும். 21.5 சதவீத மக்களே நகர மக்களாமுள்ளனர். இலங்கையில் நகராக்கவீதம் அபிவிருத்தியடைந்த நாடுகளைவிட மிகக் குறைவாகவே உள்ளது.


ஆரம்பத்தில் விவசாயக் குடியிருப்புக்கள் குளங்கள் கால்வாய்களை அடுத்து உருவாகியதால் தன்னிறைவு பெற்றிருந்த இக்கிராமங்களில் உற்பத்தி அதிகரித்ததால் கிராமங்களிடையே போக்குவரத்துப் பாதைகள் ஏற்படுத்தப்பட்டு, பண்டமாற்று முறையில் பொருட்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. காலப்போக்கில் வர்த்தக நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்ததாலும் போக்குவரத்துத் துறையில் ஏற்பட்ட விருத்தியாலும் குளங்களை அடுத்து வாழ்ந்த மக்கள் தற்போது போக்குவரத்துப் பாதைகளை அடுத்து தமது குடியிருப்புக்களை (நாடாவடிவில்) நேர் கோட்டு முறையில் அமைத்துக்கொண்டுள்ளமையை அறிய முடிகிறது.

இலங்கையில் அதிகரித்துவரும் வர்த்தக நடவடிக்கைகளாலும், கைத்தொழிற் துறையில் தனியார் துறையின் அதிகரித்த பங்களிப்பினாலும் பெருமளவு சனத்தொகையினர் கிராமங்களை விட்டு நகர்ப்புறங்களை நோக்கி நகர்ந்து குடியிருப்புக்களை ஏற்படுத்திக்கொள்வதனைக் கண்டுகொள்ளலாம்.

இலங்கையில் ஆரம்ப காலங்களில் தற்காலிக வதிவிடங்களாக அமைக்கப்பட்டிருந்த கொட்டில் வீடுகளுக்குப் பதிலாக தற்போது நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தடிகள், மண், ஓலை கொண்டு அமைக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாக செங்கல், கொங்கிறீற் கல், ஓடு பயன்படுத்தப்பட்டு நிரந்தர வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. தொழில்நுட்ப வளர்ச்சியின் அதிகரிப்பும், மக்களின் வாழ்க்கைத் தர விருத்தியும் இவ்வாறான வசதியான வீடுகளின் அதிகரிப்பிற்குக் காரணங்களாக அமைகின்றன.

மலையகப் பகுதிகளில் தோட்டத் தொழிலாளர்களுக்காக சிறிய வசதி குறைந்த லயன் காம்பராக்கள் பிரித்தானியரால் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன. ஆனால் தற்பொழுது அரசாங்கம் அவர்களுக்காக தனித்தனியான நிரந்தர வீடுகள் அமைத்துக் கொடுத்துள்ளது. அரசியல் பொருளாதார ரீதியான வளர்ச்சியே இவ்வாறான நிரந்தர வீடுகள் அமைப்பதற்குக் காரணிகளாயின.

உரு: 6.6 புதிய தோட்டக் குடியிருப்புக்கள்



இலங்கையில் 21.5 சதவீதமான மக்கள் நகர மக்களாவர். இலங்கையில் ஆறு இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற மாநகரமாகக் கொழும்பு விளங்குகின்றது. தெஹிவளை,கல்கிசை, கோட்டை, மொறட்டுவ, யாழ்ப்பாணம், கண்டி ஆகிய 5 நகரங்களில் தலா ஒரு இலட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற நகரங்களாகவுள்ளன. 50000 மக்களுக்கு மேல் வாழ்கின்ற நகரங்களாக காலி, நீர்கொழும்பு, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு நகரங்கள் காணப்படுகின்றன. இலங்கையில் பெரும்பாலான நகரங்கள் விவசாயப் பண்பின் அடிப்படையில் வளர்ச்சி பெற்றவையாகும்.

ஆரம்பக் காலத்தில் விவசாய நடவடிக்கைகளில் நெற்பயிர்ச் செய்கை முக்கிய இடம் பெற்றதுடன், தமது நுகர்வுக்காகவே பயிர்ச் செய்கையில் ஈடுபட்டமை சிறப்பம்சமாகும். தற்போது வர்த்தக நோக்கத்திற்காகவும் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது. நகர்ப்புறச் சந்தைகளுக்காக காய்கறி பழங்கள் என்பன கிராமங்களில் உற்பத்தியாக்கப்படுகின்றன. இவ்வாறான வர்த்தக நோக்கிலான பயிர்ச் செய்கை கிராமங்களில் இடம்பெறுகின்றன. கிராமப் பகுதிகளிலும் சிறிய சந்தைகள் ஏற்படுத்தப்படுவதுடன், நகரங்களினதும் உபநகரங்களினதும் வர்த்தக நடவடிக்கைகள் மேலும் விருத்தியடைகின்றன.

ஆரம்பத்தில் விவசாயம், கால்நடை வளர்ப்பு என்பவற்றில் ஈடுபட்ட மக்கள் தற்போது அவற்றில் ஈடுபடுவதைக் குறைத்து இனிப்புப் பண்டங்கள் தயாரித்தல், அலங்காரப் பொருட்கள் உற்பத்தி, காளான் உற்பத்தி, ஆடைகள் தயாரித்தல் போன்ற சுய தொழில்களில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன் நகரங்களுக்கும் உப நகரங்களுக்கும் தொழிலுக்காகச் செல்வோரின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது. கிராமப் பகுதிகளில் வாழும் இரண்டாவது மூன்றாவது தலைமுறையினர் விவசாய நடவடிக்கைகளிலிருந்து விலகிச் செல்லும் போக்கு காணப் படுகின்றது. கிராமங்களிலும் மின்சாரம், தெருக்கள், வங்கிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதில் கவனம் செலுத்தப் படுவதால் கிராமங்களின் தனித்துவமான பண்புகள் அற்றுப்போவதை அவதானிக்க முடிகிறது.

உரு: 6.7 கொழும்பு நகர மத்தியில் மாடிக் கட்டடம்



நகர சனத்தொகை விரைவாக அதிகரித்து வருவதால் அதன் கட்டமைப்பிலும் சமூக நலச் சேவைகளிலும் விரைவான

விருத்தியைத் தவிர்க்க முடியாததாக உள்ளது. இயற்கையான குடிப்பெருக்கத்துடன் இடம்பெயர் குடிகளின் குடியேற்றம் தொடர்ந்தும் நகர்ப்புறங்களில் நிகழ்கின்றது. அதிகரித்து வரும் குடித்தொகையை ஈடுசெய்ய ஏற்ற வதிவிடங்கள், போக்குவரத்து வசதிகள், மின்சார வசதிகள் தொடர்பாடல் வசதிகள் போன்ற உட்கட்டமைப்பு வசதிகளும் கல்வி, மருத்துவம், சுகாதாரம் போன்ற சமூக சேவைகளும் விருத்தியடைவதனால் நகரங்களின் பரப்பு விரிவுபடத் தொடங்கியுள்ளது.

கொழும்பு இலங்கையின் தலைநகரம் மட்டுமல்ல. பிரதான வர்த்தக மையமாகவும் போக்குவரத்து மையமாகவும் காணப்படுகிறது. இலங்கையின் ஒவ்வொரு பகுதியும் கொழும்புடன் இணைக்கப்பட்டிருக்கின்றது. வடக்கு, கிழக்கு, மலையகம் என்பன இரும்புப் பாதைகளாலும் வீதிகளாலும் இணைக்கப்பட்டிருக்கின்றன.

வர்த்தக நடவடிக்கைகளின் வளர்ச்சி காரணமாக கொழும்பு, காலி போன்ற துறைமுக நகரங்களின் வளர்ச்சி அதிகரித்தது. அதிகரித்துவரும் சனத்தொகையின் வதிவிடத் தேவையைப் பூர்த்திசெய்வதற்காக அதிகளவிலான தொடர்மாடிக் குடியிருப்புக்கள், நகர்ப்புறங்களில் அதிகரித்து வருவதனை அவதானிக்க முடிகிறது. இவ்வாறான தொடர்மாடிகளின் அதிகரிப்பு பல்வேறுபட்ட சூழல் தொடர்பான பிரச்சினைகளை ஏற்படுத்துவதாக உள்ளது.

கொழும்பில் சனத்தொகை அதிகரித்ததால் தற்போது கொழும்புடன் இணைக்கப்பட்ட பெருந்தெருக்களின் வழியே குடியிருப்புக்கள் அமைக்கப்பட்டு நாடாக் குடியிருப்புக்கள் தோற்றம் பெற்றிருக்கின்றன. கிராமங்களையும் கொழும்பையும் இணைக்கின்ற புறநகர்களாக இவை உருவாகிவருகின்றன. புதிய கண்டி வீதியில் உருவாக்கப் பட்டுள்ள குடியிருப்புக்கள் இதற்குத் தக்க உதாரணமாக விளங்குகின்றன.

எனவே கொழும்பு நகர எல்லை தற்பொழுது மேலும் விஸ்தரிக் கப்பட்டு வருகிறது. கொழும்பு நகரை மையமாக வைத்து குடியிருப்புக்கள் அதிகரித்துவருவதால் அதன் எல்லை காலத்துக்குக் காலம் அதிகரித்துக்கொண்டு செல்கிறது. இதனால் கொழும்பைச் சூழவுள்ள பகுதிகளில் கிராமநகரங்கள் அதிகரித்து வருகின்றன.

உரு: 6.8 நகரின் சேரிப்புறம் ஒன்று



கிராமநகரங்களில் கிராமியப் பண்புகளும் நகரப் பண்புகளும் இணைந்து காணப்படுகின்றன. உட்கட்டமைப்பு வசதிகள் அதிகரிப்பினால் நடுத்தர நகரம் விருத்தியடையும்போது அதனைச் சுற்றியுள்ள நகரங்களும் விருத்தியடைகின்றன. இதன் காரணமாக எதிர்காலத்தில் கொழும்பு நகரைச் சூழ்ந்துள்ள பிரதேசங்கள் தற்பொழுதுள்ள நிலைமையைவிடப் பாரிய சூழல் பிரச்சினைகளை எதிர்கொள்ளவேண்டி நேரிடும் என்பதை மறுக்க முடியாது.

இன்றுள்ள நகரங்கள் பலவற்றிலும் பரவலாகச் சேரிக்குடியிருப்புக்கள் உருவாகியுள்ளன. நகரின் கட்டடப் பகுதிகளுக்கப்பால் விளிம்புகளிலுள்ள புறம்போக்கு நிலங்களிலும் கேட்பாரற்றுக் கிடக்கும் நிலங்களிலும் சேரிப் புறங்கள் உருவாகின்றன. இங்கு நகர்ப்புறக்கூலித் தொழிலாளர்கள், ஏழைகள் குடிசைகளை அமைத்து வாழ்கின்றனர். சட்டவிரோதமான இக்குடியிருப்புக்கள் அகற்றப்பட்டாலும் மீண்டும் மிகவிரைவில் அமைக்கப்பட்டு விடுகின்றன. இச் சேரிக்குடியிருப்புக்கள் ஆரோக்கியமற்ற குடியிருப்புக்களாக விளங்குகின்றன. குறைந்த வருமானம் பெறும் மக்களுக்கு நகரங்களின் உயர்நில மதிப்பும் அதிகரித்த வாடகையும் சுமையாக இருப்பதால் இவ்வாறான சேரிப்புறங்கள் உருவாவதற்குக் காரணங்களாக அமைகின்றன.

இலங்கை அரசாங்கம் இத்தகைய சேரிப் புறங்களை இல்லாதொழிப்பதற்காகப் பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. வனாத்தமுல்ல பகுதியில் சேரிப்புறங்களில் வாழ்பவர்களுக்கு இலவசமாகக் காணிகள் வழங்கப்படுகின்றன. இவை விற்கவோ, கை மாறவோ முடியாத காணிகளாக கையளிக்கப்படுகின்றமை சிறப்பம்சமாகும். இவ்வாறு இலங்கையின் குடியிருப்பில் பல மாற்றங்கள் ஏற்பட்டுவருவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

**செயற்பாடு:**

1. நகரங்களில் தொடர்மாடிக் குடியிருப்பு அமைக்கவேண்டிய தேவை ஏற்பட்டமைக்கான காரணங்கள் இரண்டினைத் தருக.
2. கிராமக் குடியிருப்புகள் கிராமநகரங்களாக மாறுவதற்குரிய காரணங்கள் ஐந்தினை குறிப்பிடுக.
3. மாணவர்கள் குழுக்களாகப் பிரிந்து மாதிரிக் கிராமம் ஒன்றை அமைத்துக் காட்டுக.